1974 ஏப்ரல் 11]

கையெழுத்து என்னிடம் இருக்கிறது. தலைவர் அவர்களிடம் காண்பிக்க வேண்டுமானால் காட்டுகிறேன். செலக்ஷன் கமிட்டியில் யார் யாரைச் சொன்னார்களோ, எங்களுக்கு தெரிவிக்கப்பட்டதோ அந்தப்படி தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். அடுத்த கேள்வி செலக்ஷன் கமிட்டியில் உள்ளவர்கள் மார்க் போடும்போது விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்கள், விவசாயத்தில் பரம்பரையாக ஈடுபட்டு, விவசாயம் தெரிந்தவர்களுக்கு, சற்று அதிகம் மார்க் கொடுக்க வேண்டுமென்பது. இன்னதுக்கு இவ்வளவு மார்க் என்று கோர்ட்டு உத்திரவுப்படி ஒதுக்கியிருக்கிறோம். அதில் Optitude என்ற பகுதியிருக்கிறது. aptitude பகுதியில் நிச்சயம் விவசாய குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு அங்கே செலக்ஷன் கமிட்டியில் உள்ளவர்கள் அதிகமான மார்க் போட்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

கொள்ளு பயிரிடல்

* 822 வினா—திரு. அ. தேவேந்திரன்: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் எந்தெந்தப் பகுதிகளில் கொள்ளு பயிர் செய்யப்படுகின்றது?

(இ) 1972-73-ஆம் ஆண்டில் அதன் மொத்த உற்பத்தி என்ன?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) நீலகிரி, மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்கள் தவிர, மற்ற அனைத்து மாவட்டங்களிலும் கொள்ளு தமிழ் நாட்டில் பயிரிடப்படுகிறது.

(இ) 1972-73-ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் 48,850 டன் கொள்ளு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

ஆற்காடு ஒன்றியத்தில் புதிய பாலங்கள்

* 823 வினா.—திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை தொகுதி, ஆற்காடு யூனியனைச் சேர்ந்த பாப்பேரி, குக்குண்டி கிராமங்களுக்கு அருகே ஓடும் கால்வாய்களின் குறுக்கே பாலம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இல்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, இந்தப் பாலம் கட்டுவது சம்பந்தமாக பஞ்சாயத்து யூனியன், டி.டி.சி. ரெக்கமெண்டு செய்து அனுப்பியுள்ளார்கள். பல காலமாக பாதை வசதியில்லாமல் அவதிப்படுகிறார்கள்.